# இயேசு யார்?

## பாடம் - 2

## இயேசுக்கிறிஸ்துவின் தெய்வீகம்

கர்த்தராகிய இயேசு யார் என்றும் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெற்று பரலோக பாக்கியத்தை அடைவதே மனிதனுக்கு அத்தியாவசியமான ஒன்று என்றும் சென்ற பாடத்தில் பார்த்தோம். இந்த இரண்டாவது பாடத்தின் முன்பகுதி அறிந்துகொள்வதற்கு சற்று அரிதான சத்தியத்தைக் கொண்டிருந்தாலும், வேதாகமத்தின் அடிப்படைச் சத்தியங்ளை நாம் கற்றுக்கொள்ள உதவியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

ஒவ்வொரு மனிதனும் ஆன்மா, சரீரம், ஆவி (உயிர்) ஆகியவற்றால் ஆனவன். ஆயினும் இம்மூன்றும் சேர்ந்த மனிதன் ஒருவனே. அதுபோல் தேவன் தம்மை மனிதர்களுக்கு மூன்று ஆள் தன்மைகளில் வெளிப்படுத்தியுள்ளார். இம்மூன்று தன்மைகளிலும் தேவனுக்கு தனித்தனி சிறப்பியல்புகளும். விசேட செயல்பாடுகளும் உண்டு. ஆயினும் மூன்று தன்மைகளும் இணைந்த சர்வவல்லமையுள்ள தேவன் ஒருவராகவே இருக்கிறார். இதனை விளக்க பல உதாரணங்கள் இருந்தாலும், *எந்த உதாரணமும் முழுமையாக இதனை விளக்காது.* காரணம் என்னவெனில் ஒப்புயர்வற்ற தேவன், சிருஷ்டிக்கப்பட்ட எந்த வஸ்துவுக்கும் இணையாகக் கூறப்பட முடியாதவர் என்பதேயாகும்.

உருண்டையான ஒரு பொருளை ஒரு தாளில் வரைவதாக இருந்தால் வட்டமாகத்தான் வரைய முடியும். இந்த வட்டத்தைக்கொண்டு ஒருவன் கோள வடிவத்தை எப்படிப் புரிந்துகொள்ள முடியும்? கோளம் என்பது முப்பரிமாணம் என்றும், வட்டம் என்பது அதன் நிழல் உருவமான இருபரிமாணம் என்பதும் அனுபவத்தின் (கண்டும், தொட்டும்)மூலமாக மட்டுமே புரிந்துகொள்ளக் கூடியதல்லவா?

தேவனையும் ஒருவன் தன் வாழ்வில் விசுவாசக் கண்கொண்டும், அனுபவப்பூர்வமாகவும் அறிந்துகொள்ளாவிடில், அவருடைய இந்த மூன்று ஆள்தன்மைகளையும் புரிந்துகொள்ள முடியாது.

வட்டமாக நமது கண்ணுக்குத் தோன்றுகிற சந்திரன், உண்மையிலேயே கோள வடிவிலானது. எத்தனைதான் அதை நம் கண்களால் உற்று நோக்கினாலும் அது கோளமாக நமக்குத் தோன்றுவதில்லை. அதை அறிய வேண்டுமானால் அதற்கென தொலைநோக்கிகள் தேவை, அதைப்பற்றி ஆராய்ச்சி செய்து, அறிந்தவர்கள் கூறக்கேட்டுத்தான் நாம் அறிய இயலும்.

அதுபோல வேத வசனங்களை வாசிக்கும்போதும் மேலெழுந்த வாரியாக தேவன் தமது மூன்று ஆள்தன்மைகளையும் வெளிப்படுத்தவில்லை, அதை உற்று ஆராய்ந்து, தேவ ஆவியானவரின் துணையுடன், அனுபவரீதியாக அறிந்தால் மட்டுமே உணரமுடியும்.

தேவனின் இந்த <u>மூன்று ஆள் தன்மைகளாவன</u> :

முதலாவது **<u>பிதா.</u>** இவர் எல்லாவற்றுக்கும் மேலாக, எல்லாவற்றையும் படைத்து, ஒப்பில்லாத, சகலத்திற்கும் மேற்பட்ட, சகல மகிமைக்கும், கனத்திற்கும் பாத்திரரான காருண்யர்.

இரண்டாவது **<u>குமாரன்</u>.** ஆதிமுதல் பிதாவோடு இருந்தவரும், தேவனுடைய கிருபையும் சத்தியமுமான வார்த்தையின் உருவாக வெளிப்பட்டவருமான இவரே இயேசுக்கிறிஸ்து.

மூன்றாவது **<u>பரிசுத்த ஆவியானவர்</u>.** தேவனுடைய சகல படைப்பிலும், நடத்துதலிலும் கிரியை செய்பவர் இவரே. இவர் தேவனுடைய வார்த்தைகளிலிருக்கும் வல்லமையாகவும், மகிமையாகவும் இருக்கிறார். இப்போது தேவனுடைய பிள்ளைகளுக்குள்ளிருந்து அவர்களை சத்திய வழியில் நடத்துகிறவரும், அவர்களைக் காப்பவரும் இவரே. இவர் ஆவியாகவும், அக்கினியாகவும், எண்ணெயாகவும், தண்ணீராகவும், ஒளியாகவும், அன்பாகவும், காற்றாகவும், உருவமில்லாமலும், தேவனின் பலவகை வெளிப்பாடாகவும் தோன்றுகிறவர்.

இம்மூவரும் ஒன்றான ஒரே தேவனாகவே இருக்கிறார்கள். அதாவது இவர்கள் தனித்தனியாக நமக்கு வெளிப்பட்டாலும், இந்த மூன்று தன்மைகளையும் கொண்ட தேவன் ஒருவராகவே இருக்கிறார் என்பது விளங்கிக்கொள்ள அரிதான சத்தியமாகும்.

மற்றொரு வகையில் சொல்வதானால், நமது சரீர அங்கங்கள் வெவ்வேறு உருவங்களுடன், வெவ்வேறு திறன்களுடன் இருந்தாலும் நாம் ஒன்றாகவே இருக்கிறோம். தேவனுடைய மூன்று தன்மைகளும் வெவ்வேறு காலங்களில் நமக்கு வெளிப்படுத்தப்பட்டாலும், அவற்றுக்கென்று சிறப்புத் தன்மைகள் இருந்தாலும், ஆதிமுதல் இவைகள் இணைந்த ஒன்றான மெய்த்தேவன், ஒருவராகவே இருக்கிறார்.

இவர்களில் இரண்டாவதாகிய குமாரனான இயேசுக்கிறிஸ்துவே, மனிதர்களைத் தம்முடன் இணைத்துக்கொண்டு, தேவதூதர்களுக்கு ஒப்பாக அவர்களை மறுரூபப்படுத்துகிறவரும், கடவுடன் இணைப்பவருமாவார். மனிதனுக்கும் தேவனுக்கும் உள்ள உறவு இவரில் தொடங்கி இவரில் முடிகிறது. இவரே தேவனை அடைய விரும்பும் மனிதனுக்கு வழியும், உண்மையும், உயிருமாயிருப்பவர். தேவ தூதர்களோ, தீர்க்கத்தரிசிகளோ, புனிதர்களோ, பெரும்பக்தர்களோ, மனிதனால் வணங்கப்படத்தக்கவர்களல்லர். இயேசு ஒருவரே தேவனுடைய இரண்டாவது ஆள் தன்மையாக இருப்பதால் வானோர், பூமியிலுள்ளோர், பூமியின் கீழானவர்கள் ஆகிய யாவராலும் தேவனென்று துதித்து வணங்கப்படத்தக்கவர்.

இப்பாடத்தில் இயேசு மட்டுமே தெய்வம் என்பதற்கான சான்றுகளைக் கற்போம்.

1. இயேசுவின் பிறப்பு - இயேசுவின் பிறப்பு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே அறிவிக்கப்பட்டிருந்தது. அவருக்குமுன் 760 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஏசாயா என்ற தீர்க்கத்தரிசியும் இயேசுவின் பிறப்பினையும், மரணத்தையும், உயிர்த்தெழுதலையும் முன்னறிவித்திருக்கிறார். அதன்படி யோசேப்பு என்ற பக்தனுக்குத் திருமணம்செய்ய

நிச்சயிக்கப்பட்டிருந்த மரியாள் என்ற கன்னிகையின் வயிற்றில், கடவுளின் இரண்டாவது அம்சமான குமாரனாகிய இயேசுக்கிறிஸ்து, புருச சம்பந்தம் இல்லாமல் தேவ ஆவியானவரால் பிறந்தார். அவர் பிறந்தபோது தோன்றிய அவருடைய நட்சத்திரத்தைக்கண்ட வானசாஸ்திரிகள் அவரைப் பணிந்துகொண்டனர். இயேசு பிறந்த அன்றே வானில் ஒரு தூதன் தோன்றி, மந்தை மேய்க்கும் ஆட்டிடையர்களுக்கு சகல ஜனத்திற்கும் சந்தோசத்தை உண்டாக்கும் அந்த நற்செய்தியை அறிவித்தான். இப்படி எளியவர்களுக்கும் ஞானிகளுக்குமாக தெரிந்துகொள்ளப்பட்ட சிலருக்கு மட்டுமே தேவகுமாரனின் பிறப்பு அறிவிக்கப்பட்டதும், அவர் பிறந்த இடம் மற்றவர்கள் ஊகித்தறிய முடியாத எளிய ஒரு சத்திரத்தின் கால்நடைகளைக் காக்கும் பகுதியாய் இருந்ததும் தேவனுடைய மகா இரகசியமாகும். இயேசு பிறந்த உடனே வானதூதர்கள், வானசேனைகள் யாவும் அவனுடன் தோன்றி தேவனையும், மனுக்குலத்தையும் வாழ்த்தினார்கள். இப்படி இயேசுவின் பிறப்பு முன்னறிவிக்கப்பட்டு, முன்னும் பின்னும் தேவதூதர்கள் அறிவிக்க, சரித்திரப் பூர்வமாக இன்றிலிருந்து 2004 ஆண்டுகளுக்குமுன் நடந்தது. வேறு யாருக்கும் இதுபோல் சரித்திரம் இல்லை.

2. இயேசுவின் சொற்கள் - இயேசு தான் யாரேன்பதை தனக்குச் சாட்சியாக தாம் பூமியில் ஏற்படுத்தின மனிதர்களுக்கு நேரடியாகவும், உவமைகள் மூலமாகவும் வெளிப்படுத்தினார். வேறெந்தத் தீர்க்கத்தரிசிகளும். பக்தர்களும் சொல்ல முடியாத வார்த்தைகளால் தம்மை உலகுக்குக் காட்டினார். தனக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த ஆபிரகாம் என்ற பக்தனைக்குறித்துப் பேசும்போது, அவன் தோன்றுவதற்கு முன்பே நான் இருக்கிறேன் என்றுசொல்லி, தான் தோற்றமும் முடிவுமில்லாதவர் என்பதை வெளிப்படுத்தினார். நானே உலகத்துக்கு ஒளியாக இருக்கிறேன், நானே ஆன்மாவிற்கு ஆகாரம், நானே பரலோகிற்குச் செல்லும் வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன், நானே உயிர்த்தெழுதலும், உயிருமாய் இருக்கிறேன் என்று இயேசு தம்மை வெளிப்படுத்தினார். ஆனால் அவர் சொன்னதின் பொருளை சிற்றறிவு உள்ள மனிதர்களால் உடனடியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. அவருடைய வார்த்தைகளிலிருந்த வல்லமைகளை அவர்கள் கண்ணாரக் கண்டும், அவர் யாரென்பதை உடனடியாக பலர் புரிந்துகொள்ளவில்லை. இருப்பினும் அவருடைய வார்த்தைகள் என்றும் மாறாத, மாற்ற முடியாத சத்தியங்களாய் இருப்பதை தமது பரிசுத்தவான்கள் மூலம் நமக்கு வெளிப்படுத்தியதால் படிப்படியாக நாம் அறிந்துகொண்டுவிட்டோம்.

இயேசுவின் வார்த்தைகளில் ஒன்றையாவது பொய்யாக்க வேண்டும் என்று காலங்காலமாக அநேகர் முயற்றித்துவந்தும் ஒருவராலும் முடியவில்லை. அவருடைய வாக்குகளிலேயே மிகவும் முக்கியமானது என்னவென்றால், அவர் மீண்டும் இப்பூமிக்கு நித்திய நியாயாதிபதியாக வந்து மரித்தோரையும், உயிரோடிருப்பவர்களையும் நியாயந்தீர்ப்பார் என்பதுதான்.

**3 . இயேசுவின் செயல்கள்** - இயேசுவுக்குமுன் வசித்த தீர்க்கத்தரிசிகளும். அவருக்குப் பின்னர் வந்த பக்தர்களும் பலவித அற்புதங்களைச் செய்துள்ளனர். அவர்களெல்லாம் தேவனைநோக்கி ஜெபம்பண்ணி, அதன்மூலம் தேவனுடைய வல்லமையைப்பெற்று அப்படிச் செய்தனர். இயேசுவோ மற்றவர்களிலிருந்து வேறுபட்டு, அவரே சுயஅதிகாரமுடைய தெய்வமாதலால், தனது சொந்த வல்லமையைக்கொண்டு அநேகருடைய நோய்களைக் குணமாக்கி, மரித்தவர்களை உயிரோடெழுப்பினார். எல்லாவற்றுக்கும் மேலாக பொங்கும் கடலையும், காற்றையும் நேரடியாகக் கட்டளையிட்டு அதட்டி, அமைதிப்படுத்தி, தான் யாரேன்பதை வெளிப்படுத்தினார். பலமுறை தேவதூதர்கள் அவருக்குப் பணிவிடை செய்தார்கள். தீர்க்கத்தரிசிகளிலும், தெய்வச்சட்டங்களை மக்களுக்கு வழங்கியோரிலுமிருந்து வேறுபட்டு, இவரே தேவனாக இருப்பதால் இவருக்குக் கீழ்ப்படி யுங்கள் என்று வானத்திலிருந்து பிதா பேசினார். தானே தேவனுடைய சரீர வெளிப்பாடு என்பதை “என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான” என்று சொன்னார். அதுவரை யாரும் பயன்படுத்தாத இயலாத தனது பாவமன்னிப்புத்தரும் அதிகாரத்தால், பலருடைய பாவங்களை மன்னித்து, உடனடியாக அவர்களுக்கு பரலோக பாக்கியத்தையும் வழங்கினார்.

இறுதியாக சிலுவை சுமந்து செல்லும்போதும், தன்முன்னுள்ள மக்களை நோக்கி, தன்னால் ஆயிரமாயிரம் தூதர்களை வரவழைத்து, தன்னைக் கொலை செய்யப்போகிறவர்களிடமிருந்து தற்காத்துக்கொள்ள முடியும் என்பதையும், தானாகவே மக்களுடைய பாவங்களை ஏற்றுக்கொண்டு சிலுவை சுமந்து செல்வதையும் தெளிவுபடுத்தினார். மரித்தபின் மூன்றாவதுநாள் தான் சொன்னபடியே உயிரோடெழுந்து, தான் மரணமில்லாத தேவகுமாரன் என்பதை நிரூபித்தார்.

***4 . இயேசுவின் சிலுவைப் பாடுகள்*** - ஒரு திட்டத்தை உருவாக்கிய தலைவனே அதனை செயல்படுத்தவும் முன்வருவது அவனுக்குச் சிறப்பாகும். எந்தப் பாவத்திற்கும் இரத்தம் சிந்துதலே பரிகாரமாகும் என்பது தேவனுடைய கட்டளை.

அப்படி சிந்தப்படும் இரத்தம் பரிசுத்தமானதாக இருக்கவேண்டும். மனிதனின் பாவத்திற்காக அதைச் செய்தவனே ரத்தம் சிந்தினால் அது அசுத்த ரத்தமாகவே இருக்கும். மேலும் பாவங்களின் எண்ணிக்கை அதிகமாயிருப்பதால் தன்னுடைய எல்லாப் பாவத்திற்கும் அவனே ரத்தம் சிந்தவும் முடியாது. எனவே தேவனே மனிதன்மீதுள்ள அன்பின் காரணமாக தானே பரிசுத்த ரத்தமுடைய இயேசுவாக பூமியில் தோன்றி அநேகமாயிரம் மனிதர்களின் பாவத்திற்காக தமது சட்டப்படி ரத்தம் சிந்தினார்.

ஒரு தந்தை தனது மகன் உடைத்த பொருட்களை தனது சம்பாத்தியத்திலிருந்து ஈடு செய்வதுபோலவும், ஒரு குற்றவாளியின்மீது இரக்கப்பட்டு அவனுக்குத் தண்டனை விதித்த நீதிபதியே அபராதத் தொகையைச் செலுத்துவதுபோலவும் இயேசுவின் சிலுவைப் பாடுகள் அமைந்தது.

ஒரு பெரிய படுகுழியில் விழுந்தவனை வெளியிலிருக்கும் ஒருவன்தான் தூக்கிவிட முடியுமே அல்லாமல், குழியில் இருக்கும் மற்றொருவன் அவனைத் தூக்கிவிட முடியாது. மேலிருந்து ஒருவன் ஒரு கயிற்றுடன் குழிக்குள் இறங்கி, அதனைப் பயன்படுத்திக்காட்டினால், அதைப் பிடித்துக்கொண்டு அநேகர் வெளியே வந்துவிட முடியும். அதேபோல் பாவமுள்ள மனிதர்களை இரட்சிப்பது, பரிசுத்தமுள்ள தேவனாலே மாத்திரமே முடிந்ததாகும், அவர் கொண்டுவந்த இயேசுகிறிஸ்துவின் ரத்தத்தினாலாகிய மார்க்கமே நாம் பாவப் படுகுழிக்குள்ளிருந்து வெளியேற உதவும் சிவப்புக் கயிறாகும்.

***4. இயேசுவின் உயிர்த்தெழுதல்*** - சிலுவையில் அநேகமாயிரம் மனிதர்களின் பாவத்திற்காக ரத்தம்சிந்தி மரித்த இயேசு, தமது வல்லமையை வெளிக்காட்டும்படியாகவும், தானே உயிர்களைப் படைத்தவன் என்பதை நிலைநாட்டும்படியாகவும், மூன்றாம்நாள் உயிர்த்தெழுந்தார். அவருடைய சரீரம் மூன்றுநாள் கல்லறையில் வைக்கப்பட்டு ரோம சேவகர்களால் காவல் காக்கப்பட்டது. அவர் மூன்றாம் நாள் தாம் சொன்னபடியே மிகுந்த பிரகாசத்துடன் தனது சரீரத்தில் ஜீவனைச் செலுத்தி எழுந்தபோது, இவர்களெல்லாம் அவருக்குமுன் நிற்கமுடியாமல் செத்தவர்களைப்போல விழுந்தார்கள். அதன்பின் தமது உண்மையுள்ள சீஷர்களுக்கும், தாம் தெரிந்துகொண்ட 500 க்கும் அதிகமான நபர்களுக்கும் (தேவனைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றவர்களுக்கு மட்டும்) தம்மைக் காட்டினார். அவர்களுடைய சாட்சிகளைக் கேட்டு, தன்னை விசுவாசிக்கும் யாவருக்கும் இன்றும் இயேசு தன்னை வெளிப்படுத்தி வருகிறார். உயிர்த்தெழுந்த இயேசு தாம் பூமியிலிருக்கும்படி தான்

நிர்ணயித்திருந்த நாற்பது நாட்கள் முடிந்தபின்னர், யாவரும் காணும்படியாக பரலோகத்திற்கு ஏறிச்சென்றார்.

5. *இயேசுவின் இறுதி வாக்குத்தத்தமும் வருகையும்:* -இயேசு பரலோகத்திற்கு ஏறிச்சென்ற நாளில், சீசர்களிடம் மனந்திரும்புதலும், பாவமன்னிப்பும் சகல மனிதருக்கும் பிரசங்கிக்கப்பட வேண்டும் என்ற பொறுப்பினை ஒப்படைத்தார். இந்த சீஷர்கள் சொல்கிற அவருடைய வார்த்தைகளின்படி செய்கிற யாவரோடும் உலகின் முடிவுமட்டும் நான் இருக்கிறேன் என்று வாக்குறுதி அளித்துள்ளார். இயேசுவின் சீஷர்கள் சொல்வதெல்லாம் உண்மைதான் என்பதற்கு அவர்கள் மூலம் தேவன் செய்த அற்புதமான செயல்கள் சாட்சியாக விளங்கின. இன்றும் இயேசுவைப் பிரசங்கிக்கிற ஊழியர்களின் ஜெபங்கள்மூலம் அநேக நோய்களைக் குணமாக்கி, பேய்களைத் துரத்தி, பிரச்சனைகளைத் தீர்த்துவைப்பதை தனது வார்த்தையின்படியே இயேசு நிறைவேற்றுகிறார். மேலும் இயேசு தாம் சொன்னபடியே மரித்தவர்களையும், இருப்பவர்களையும் நியாயம் தீர்ப்பதற்காக, தமது பரிசுத்த வல்ல தூதர்களோடு விரைவில் பூமிக்கு வரப்போகிறார். அதற்கு அடையாளங்களாக அவர் சொன்ன நிகர்ச்சிகள் யாவும், சிறிதும் பிசகாமல் இன்று நடந்துவருகிறது. அவருடைய வருகையின் நாளில் மரித்த மற்றும் உயிரோடிருக்கிற யாவரும் தங்கள் செயல்களுக்கு அவரிடம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.

அந்த நாளுக்கு மனிதகுலம் தயாராக வேண்டியது அதன்மீது விழுந்த கடமையாகும்.

7. *இன்றும் கிரியை செய்யும் இயேசு* - தன்னை விசுவாசிப்பவன் என்னிலும் பெரிய கிரியைகளைச் செய்வான் என்று இயேசு வாக்களித்தபடி, இன்றும் பரிசுத்த ஆவியைப் பெற்ற ஊழியர்களின் ஜெபங்கள் மூலம் இயேசு அற்புதங்களைச் செய்துவருகிறார். பொதுவாக நெருப்பில் ஓடுதல், கம்பிகளால் தங்களைக் குத்திக்கொள்ளுதல் போன்ற யாருக்கும் பயனற்ற செயல்களை **தெய்வத்தின் அருள்** என்று மக்கள் நம்பிவருகின்றனர். இயேசுவின் சத்தியத்தைக் கேட்பவர்களிடத்திலோ நோய்கள் குணமாவது, குடி வெறி விபச்சார பாவங்களைவிட்டு புதியவாழ்க்கை துவங்குவது, ஒரே வார்த்தையினால் பிசாசுகள் துரத்தப்பட்டு மனிதர்கள் குணமாவது, போன்ற பயனுள்ள அதிசயங்கள் நடைபெறுகின்றன. உங்களில் சிலர் இந்த அதிசயங்களைக் கண்டும், அனுபவித்துமிருக்கலாம். இவை தவிர தேவனுடைய விசுவாசிகளை ஆபத்து நேரத்தில் தேவதூதர்களே நேரடியாக வந்து காப்பாற்றியிருக்கும் அதிசயத்தையும் பலர் அனுபவித்திருக்கின்றனர்.

சில போர்களில், ஜெபிக்கும் போர்வீரர்களின்மீது எதிரிகள் சுட முயற்சிக்கும்போது, சுட முடியாதபடி ஒட்டுமொத்தமாக அவர்களின் ஆயுதங்கள் செயலிழந்து போனதை அனுபவ சாட்சிகளாக அறிந்துள்ளோம். அநேகருடைய வாழ்க்கைப் பிரச்சனைகள், துயரங்கள் ஆகியவை வரம்பெற்ற ஊழியர்கள் ஜெபிக்கும்போது உடனடியாக விலகுவதை உணர்கிறார்கள். நீங்களும் உங்கள் வாழ்வின் பிரச்சனைகளை இயேசுவின் அருளால் தீர்த்துக்கொள்ள முடியும். அப்படி ஒரு குறிப்பிட்ட பிரச்சனையை இன்று எடுத்துக்கொண்டு இயேசுவிடம் ஜெபித்துப்பாருங்கள், உடனடியாக அப்பிரச்சனை தீரும் என்பதை உங்களுக்கு வாக்குத்தத்தமாகத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இயேசு என்னும் சத்தியத்தை நீங்கள் உங்கள் வாழ்வில் ஏற்றுக்கொள்ளவும், அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பையும், பரலோக பாக்கியத்தையும் பெற்றுக்கொள்ளவும் அநேக வாய்ப்புகள் உங்களுக்கு உண்டு. அவைகள் நீங்கள் பெற்றுக்கொண்ட சரீர சுகமாகமாகவோ, கண்கண்ட சாட்சியாகவோ, ஆபத்திலிருந்து காக்கப்பட்ட நிகழ்ச்சியாகவோ, இருதயத்தில் பேசுகிற அவருடைய சத்தமாகவோ இருக்கலாம். அவைகளை அசட்டை செய்யாமல், அவரை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளுவதே எல்லாவற்றையும்விட உங்களுக்குக் கிடைக்கும் பெரிய பாக்கியம். இலவசமாய் கிடைக்கும் அந்த பாக்கியத்தை இழந்துவிடாதீர்கள்.

இந்தச் சிறிய புத்தகம் நீங்கள் இந்த பாக்கியத்தைப் பெறுவதற்கு முழுமையாக வழிநடத்துகிற "பரிசுத்த வேதாகமம்" என்னும் பெரிய புத்தகத்தை நேசிப்பதற்கு உங்களை வழிநடத்தட்டும். பாடம் 4 -ல் இதைக்குறித்து மேலும் கற்போம்.

**கீழ்கண்ட கேள்விகளுக்கு பதிலளியுங்கள்**

1) **தேவன் தம்மை எத்தகைய ஆள் தன்மைகளில் வெளிப்படுத்தியிருக்கிறார்?**

2) **இயேசு ஒருவரே தெய்வம் என்பதற்கு கொடுக்கப்பட்டுள்ள அத்தாட்சிகளில் உங்களுக்குப் பிடித்த மூன்று எவைகள்?**

3) **தேவனுடைய மூன்று ஆள்தன்மைகளையும் எந்த உவமைகளாலும் முழுமையாக விளக்க முடியாதது ஏன்?**

4) **உங்கள் வாழ்க்கையில் இயேசு செய்த நன்மைகள் ஏதாகிலும் உண்டா?**

5) **நீங்கள் எதிர்பார்த்திருக்கும் நன்மையை இயேசு உங்களுக்கு வழங்குவார் என்று நம்புகிறீர்களா?**

அன்பார்ந்தவர்களே!

மேல்காணும் கேள்விகளுக்கான பதில்களை கீழ்காணும் அஞ்சல் அல்லது மின்னஞ்சலின் ஊடாக பதில் அளிக்கலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அஞ்சல் முகவரி: **J.K.JESUDOSS CHELLADURAI**
**604 Third Building,**
**Shanthi Park Appartments**
**Jayanagar 9 th Block**
**Bangalore -69**
**India**
மின்னஞ்சல் முகவரி: **jkjesudoss@yahoo.com**

## பாடங்கள்:

- இயேசு யார்
- இயேசுவின் தெய்வீகம்
- இரட்சிப்பின் வழி
- ஜெபமும் வேதவாசிப்பும்
- சாத்தானும் மனிதனும்
- மோட்சமும் நரகமும்
- ஞானஸ்நானமும், பரிசுத்த ஆவியானவரும்
- சுவிசேஷமும், விசுவாசியும்
- திருச்சபையும், சபைப்பிரிவுகளும்
- இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை

� copyright 1999-2017 TAMILCHRISTIAN.COM All rights reserved.